# தமிழ்ச்சோலை

அரையாண்டிதழ் மாணாக்கர் வெளியீடு

மலர் : 11 நவம்பர் : 2021 அரும்பு : 20

## இணைய இதழ்




## சாதனைப் பெண்கள்

தமிழாய்வுத்துறை

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் (மூன்றாம் சுற்று) ‘A’ தகுதி பெற்றது

திருச்சிராப்பள்ளி – 18

# ஆசிரியர் குழு

- முனைவர் ச.இராமலெட்சுமி
- முனைவர் மு.ஜெயலெட்சுமி
- முனைவர் மா.ஆசியாதாரா
- திருமதி.பொ.அபிராமி

ஊதுகுழலைக் கையில் எடுக்கும் பெண்கள் எழுதுகோலைக் கையில் எடுக்க வேண்டும். சிந்திக்கும் மூளை அவளுக்கும் உண்டு நிந்திக்க வேண்டாம் அவள் திறமையை என்பதற்கிணங்கப் பெண்களுக்குக் கல்வி வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது காவேரி மகளிர் கல்லூரி. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்பதற்கேற்ப தமிழ் மொழியின் சிறப்பினைத் திக்கெட்டும் சேர்க்கும் ஆற்றலுடன் இயங்கி வருகிறது தமிழாய்வுத்துறை.

கல்லூரிப் பருவம் தங்களைச் சீர்படுத்தி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கித் தரும் உன்னதமான பருவம். கல்வி ஒரு கண் என்றால் கலைகள் மறு கண்ணாக அமைந்து மாணவர்களின் வாழ்விற்கு நம்பிக்கை அளிக்கிறது.

மாணவர்களுக்குக் கல்வி மட்டுமல்லாது அவர்களிடம் புதைந்து கிடக்கின்ற கற்பனை ஆற்றல்களையும், சிந்திக்கும் திறன்களையும் வளர்க்கும் திறவுகோலாகத் திகழ்கிறது தமிழ்ச் சோலை என்னும் இதழ். ஒவ்வொரு ஆண்டிற்கும் இரு முறை இவ்விதழ் வெளிவருகின்றது. உயர்ந்த சிந்தனையும், விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி பெறலாம் என்ற சிந்தனையுடன் இப்பருவத்திற்குரிய இணைய வழி இதழாக மலர்கிறது தமிழ்ச்சோலை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கவிதைகள் | - | 1 |
| சிறுகதை | - | 12 |
| கட்டுரை | - | 14 |
| மருத்துவக் குறிப்புகள் | - | 29 |
| விடுகதைகள் | - | 31 |
| தெரிந்து கொள்வோம் | - | 33 |
| தகவல் களஞ்சியம் | - | 34 |
| பொது அறிவு | - | 35 |
| ஓவியங்கள் | - | 36 |

# மழை



ஒளிவீசும் கதிரவனை

முகம் புதைக்கச் செய்யும் பலசாலியே!

பூமிப்பந்தைப் புதுப்பிக்க

புதுப்பிறவி எடுத்த மாவீரனே!

நீ யூகிக்க முடியாத புதிா்

வெப்பம் தணிக்கும் கருணை தேவன்!

மண்ணில் வீழ்ந்து மறுபடியும்

விண்ணில் பாயும் வித்தகன்!

தாகம் தீா்த்தல்

தரணி செழித்தல்

உயிா்களைக் காத்தல்

எல்லாமும் நீயாய் . . .

எங்கள் நாடித் துடிப்பே

எப்போது வருவாய்?

மண்ணின் தேவதையாய் . . .

**பா. சாரணி**

**இளங்கலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**



# இந்திய தேசம் என் தேசம்




செயற்கை இல்லா வாழ்க்கை

வளங்கள் அனைத்தும் இயற்கை

நோயில்லா வாழ்க்கை

மருத்துவம் அனைத்தும் இயற்கை

கட்டணம் இல்லாக் கல்வி

கட்டிடம் இல்லாக் கல்வி

தேர்வில்லாத் தேர்ச்சி

திறனை வளர்க்கப் பயிற்சி

பணியின்றி எவரும் இல்லை

பயன் இல்லா ஒருவர் இல்லை

சாதி, மதம் இல்லை

சரித்திரம் படைக்கத் தடை இல்லை

சாதனை பெறுவதில் முதலிடம்

அதில் என்றும் நாமே முதல் தடம்

நம் விஞ்ஞானியின் கனவுகளை நினைவாக்க

தேசத்தின் கனவை நிஜமாக்க

இளைஞர்களின் கையில் இந்தியா

ஒவ்வொரு இளைஞர்களின் இதயத்தில்

ஒலிக்கும் ஓசை "இந்திய தேசம் என் தேசம்"

**சிவ.சாஷினி**

**இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல்துறை**



# புதிய யுகம்



என் புதிய உலகம்
இங்கே!
ஏழைகள் யாருமில்லை
ஜாதி மத பேதமில்லை

பெட்ரோல் தேவையில்லை
வாகன நெரிசல் வாழ்வில் இல்லை!
சுற்றுப்புறங்கள் அசுத்தமில்லை!
சோம்பேறிகள் இல்லை!

விண்ணில் பறக்கும் வாகனமுண்டு!
அதை வெற்றிகரமாய் இயக்க
இயந்திர மனிதர்கள் உண்டு!
பள்ளிக்கூடம் தூரம் இல்லை
பாடப் புத்தகம் பாரம் இல்லை!
இணையக் கல்வி இங்கே உண்டு -- அதை
இயக்க இயந்திரம் அருகில் உண்டு!

சாணம் தெளித்த முற்றத்தில்
கோணல் நிலவை ரசித்தபடி
கலக்கமின்றிக் கழிந்தது -- என்
கனவு தேசத்தின்
இரவுப் பொழுதுகள்!

**சே.தேவதர்சினி**

**இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**



## அம்மா



நான் உனக்கு வலியைக் கொடுத்தேன்!

நீ எனக்கு உயிரைக் கொடுத்தாய்!

நான் உனக்குத் தொல்லை கொடுத்தேன்!

நீ எனக்கு அன்பைக் கொடுத்தாய்!

எனக்கு அனைத்தையும் கொடுக்கும் நீ யாரென்று கேட்டேன்!

அம்மா என்ற மூன்றெழுத்தில் முடித்தாய்!

**ஆர்.ஹரித்ரா**

**இளநிலை முதலாண்டு கணினிஅறிவியல் காக்னடிக்**



## என் கனவு தேசம்

பாரத தேசம் அது எனது கனவு தேசம்

ஐ.நா. சபையில் ஆலோசனை நவில்கிறாள் நங்கை

சங்கத்தில் சங்கமித்து எண் தொகையிலும்

பத்துப்பாட்டிலும் பவனி வந்த மங்கையர்கள்

புகுந்த வீட்டில் தொலைத்துவிட்ட சுதந்திரத்தை

மீட்டெடுத்து நங்கை சந்தோஷ வானில் சிறகடிக்கும்

சீர்மிக்க தேசம் என் இமைகளிலே ஈர்க்கிறது

வளியை மாசாக்கி வலியை எனக்களிக்கும்

மாசில்லாத் தேசத்தில் நான் உலா வரும் நாள்


ஐயா அப்துல்கலாம் விட்டுச் சென்ற

கனவை நான் நனவாக்கி என்

தேசத்தின் தூணாய் நான் திகழ்ந்திடவே
தினந்தினம் கனவுகளைக் காண்கின்றேன்
படிக்காத மேதை கட்டிய
பள்ளியிலே படித்துவிட்டுப் பட்ட மரமாய்ப்
பாரினிலே தினந்தோறும் ஒளி இழந்து தவிக்கும்
எண்ணிலடங்காப் பணியில்லா மாந்தர்
இனியில்லாத் தேசம் என் தேசம்
உலகிலுள்ள படிப்புகள் அனைத்தையுமே
படித்துவிட்டுத் தேர்வு எழுதி
தேர்ச்சி நிலை அடைந்த உடனே
வேலையொன்று கிடைக்கின்ற தேசமே
வெகுநாளாய் என் கனவில் தோன்றுதே
வெந்து வெந்து கண்ணீரும் வருகின்றதே
அழையா விருந்தாளியாய் என் தேசத்தில்
அடியெடுத்து வைத்து ஆயிரமாயிரம் மாந்தரின்
ஆவியை விருந்தாக்கிய கொடிய கொரோனா
என் தேசம் விட்டுத் தலைத்தெறித்தோடி
காணாக் கேளிரை நான் கண்டு
தாயின் கருவறையாம் வகுப்பறையில்
நான் அமர்ந்து என் ஆசான் தாலாட்டைத்
தலையாட்டி நான் கேட்டு தாய்மடியில்
குழந்தை கொஞ்சி விளையாடுவதைப் போல்
என் மடியில் புத்தகத்தைத் தவழவிடும் கனவு தேசம்
என் தேசம்! வாழ்க பாரதம்! வளர்க தமிழ்!

**எஸ். சங்கீதா**

**இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியியல்**





# எதிர்பார்ப்பு

அன்பால் அகிலமும் ஒற்றுமை கொண்ட தேசமிது
பண்பும் பகுத்தறிவும் மேலோங்கிய தேசமிது
கல்விமான்களும் கருணையே செய்யும் தேசமிது
ஏழை பணக்காரரென ஏற்றத்தாழ்வில்லாத் தேசமிது
பயமில்லாமல் பெண்கள் நடமாடும் தேசமிது
நோயும் மருத்துவமும் ஓய்வு பெற்ற தேசமிது
குழந்தைகளும் சுற்றி விளையாடும் சுதந்திரம் கொண்ட தேசமிது
பொறுப்பும் பக்குவமும் கற்றுத் தரப்பட்ட தேசமிது
சமஉரிமையைப் பாலவயதிலிருந்து ஊட்டி வளர்த்த தேசமிது
வளர்ச்சியால் பூமித்தாயைப் பாழ்படுத்தாத தேசமிது
மரக்கனியென இயற்கையைப் பாதுகாக்கும் தேசமிது
பஞ்சங்களும் சீற்றங்களும் எட்டிப் பார்க்காத் தேசமிது
படித்தவர்களும் திறமையானவரும் ஆளுகைசெய்யும் தேசமிது
பணத்தால் பிரிவும் ஆசையும் கொள்ளாத் தேசமிது
என் கனவில் நான் கண்ட தேசத்தை
உங்கள் நினைவிலும் ஊடுருவச்செய்து
எம் எழுத்தின் வழி உங்களிடம் விதைக்கிறேன்
எதிர்பார்ப்புகளோடும் ஆசைகளோடும் . . .

**அருள் பிரபா.ஜெ**

**இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் அ பிரிவு**



# தேசமும் நேசமும்



நெருடல் இல்லாக் காற்று
சுழற்சிக்கு உட்படாத குடிநீர்
இடித்துக் கொள்ளாத வீடுகள்
மனம் விரும்பும் மனிதர்கள்
ஐந்தரை வயதில் ஆரம்பக் கல்வி
அனைவருக்கும் ஒரே பள்ளி
அரசே நடத்தும் மருத்துவமனை
ஆசையில்லாத ஆட்சியாளர்கள்
இலவசம் விரும்பாத மக்கள்
ஊழல் செய்யாத ஆட்சியாளர்கள்
தட்டிக் கேட்கும் பாமரன்கள்
அனைத்திலும் ஐம்பது சத பெண்கள்
கண்டுபிடிப்பில் புதுமை
கருத்தியலில் முதுமை
மறைந்துபோன வறுமை
அனைத்திலும் முதன்மை
தெற்கு முழுவதும் நெற்கதிர்கள்
வடக்கு முழுவதும் கோதுமை மணிகள்
கயல் விளையாடும் கடல்
பத்திரமாய்ப் போய் வரும் படகு
நடுக்கடல் அமைதியாய்த் தேசம்
அளவான மழை
மிதமான கோடை
இதமான குளிர்
சுகமான பருவத்தில் என் தேசம்
என்றென்றும் இளமையாய்
நூற்றுமுப்பது கோடி
வயிறுகளும் நிரம்ப நிரம்ப
குண்டு விளையாடும் இராணுவம்
பந்து விளையாடும் படியாய்

வைரசும் வைரியும் நுழையாத எல்லை
காவல் நிலையங்களும் நீதிமன்றங்களும்
கலைக்கப்பட்ட சூழல்
எதிர்கட்சிகள் இல்லாத மக்கள் சபை
அதில் எல்லோருக்கும் நல்லவராய் ஒரு பிரதமர்
பூமிக்கெல்லாம் தலைமை ஏற்கும்
புதிய சாசனம்
அதில் ஆசனம் போட்டு அமரும்
தேசமாய் என் தேசம்
கோட்சூட் அணிந்த விவசாயி
கழுத்துப்பட்டை ட்டிய
நெசவாளி
எல்லோரும் முழுமனிதனாய்
இளமையில் இலவசமாய்
எல்லோருக்கும் வேலை நிரந்தரமாய்
என் தேசம் என்ற கலைக்கோயில் . . .
ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர்
முதலெழுத்து மட்டும் இந்தியனாய்
என் தேசம் என்றும்
ஒற்றுமையாய் ஒப்புரவாய்
ஜெய்ஹிந்த்

**எஸ். மகாவர்த்தினி**

**இளநிலை இரண்டாமாண்டு வணிக மேலாண்மையியல்**



# ஜன்னல் வழி பயணம்



சாளரத்திற்குப் பின்னால்
கவிதையாகப் பொழிந்து
கொண்டிருந்தது மழை. . . .
பேனாவைத் தேடினேன்
திடீரெனச் சிந்தனை
நடைபாதை வாசிகளும்
ஒழுகும் கூரைகளும்
தேவைகளைத் தன்
வார்த்தைகளால்
மொழிபெயர்க்கத் தெரியாத,
பசியின்றித் தவிக்கும்
மழலையின் - அழுகை
வறுமையைப் பார்த்து
கவிதை நின்றது.

**வி.காயத்ரி**
**இளநிலை மூன்றாமாண்டு சமூகப்பணி**



# மூன்றெழுத்து



அம்மா மூன்றெழுத்து அப்பா மூன்றெழுத்து
தம்பி மூன்றெழுத்து தங்கை மூன்றெழுத்து
அக்கா மூன்றெழுத்து அண்ணி மூன்றெழுத்து
மகன் மூன்றெழுத்து மகள் மூன்றெழுத்து
தாத்தா மூன்றெழுத்து பாட்டி மூன்றெழுத்து
பேரன் மூன்றெழுத்து பேத்தி மூன்றெழுத்து
இவை அனைத்தும் அடங்கிய உறவு மூன்றெழுத்து
உறவில் மேம்படும் பாசம் மூன்றெழுத்து
பாசத்தில் விளையும் அன்பு மூன்றெழுத்து
இவற்றைப் பிணைக்கும் நட்பு என்ற மூன்றெழுத்தில்
இணைந்து படித்த அனைவருக்கும் நன்றி மூன்றெழுத்து
இவை அனைத்தும் அடங்கிய தமிழ் மூன்றெழுத்து

**ப. சரண்யா**

**முதுகலை முதலாமாண்டு தமிழிலக்கியம்**



# ஹைக்கூ



யாராவது

குடிக்க நீர் கொடுங்களேன்

நாவறட்சியில்

நடுக்கடலில் தவித்தபடி

படகோட்டி



இரவெல்லாம்

உறங்காமல்

விழித்திருக்கிறேன்

நன்றாக உறங்கும்

மின்விசிறியால்

**ம. மலர்சூர்யா**

**இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல்**

## சிறுகதை



# உண்மையின் விலை

ஒரு ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த கடவுள் பக்தியும் நல்ல உள்ளமும் கொண்டவன். அவனது தாயார் அவனுக்கு நல்ல நீதிக்கதைகளைக் கூறி வளர்த்து வந்தார். அந்தத் தாய், கஷ்டப்பட்டாலும் தனது மகன் நல்லவனாகப் பிற்காலத்தில் வாழ்ந்து சிறப்புப் பெற வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டாள்.

அதனால் அவனுக்குத் தீய பழக்கங்கள், தீய நண்பர்கள் சேர்ந்து விடாமல் மிகவும் கவனமுடன் பார்த்துக்கொண்டாள். அவன் வாலிபனானான். வேலைக்குச் சென்றால்தான் தாயைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டது. வேறு ஊருக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைத் தாய் மிகுந்த அக்கறையுடன் செய்து முடித்தாள். அவன் கிளம்பும் நாள் வந்தபோது தாய் அவனிடம் 'மகனே! உனக்கு என்ன நேர்ந்தாலும் உண்மை பேசுவதை மட்டும் விட்டுவிடாதே! எங்கும் எப்போதும் யாரிடத்திலும் உண்மையை மட்டுமே நீ பேச வேண்டும். இதை மட்டும் மறக்காதே' என்று கூறி அவனை அனுப்பி வைத்தாள்.

அக்காலத்தில் எங்கு சென்றாலும் நடைப்பயணம்தான். வாகன வசதிகள் கிடையாது. ஆகவே, அந்த வாலிபன் ஒரு கூட்டத்தாருடன் சேர்ந்து தனது பயணத்தைத் துவங்கினான்.

செல்லும் வழியில் சில கொள்ளையர்கள் அந்தக் கூட்டத்தை வழிமறித்தனர். கூட்டத்தினரிடம் இருந்த பொருள்களையெல்லாம் பறித்தனர். அந்த வாலிபனிடம் ஒரு கொள்ளையன் வந்து 'உன்னிடம் என்ன உள்ளது' என்று கேட்டான். அப்போது அந்த வாலிபன் தனது தாய் சொன்னது போல, மறைக்காமல் உண்மையைக் கூறினான். என்னிடம் நாற்பது ரூபாய்கள் மட்டுமே உள்ளன என்றான்.

கொள்ளையர்கள் அவனைப் பரிசோதித்துப் பார்த்தனர். ஆச்சரியமடைந்தனர். அவன் சொன்னது போலவே அவனிடம் நாற்பது ரூபாய்கள் மட்டுமே இருந்தன. கொள்ளையர்களின் தலைவன் அசந்து போனான். அந்தச் சிறிய வாலிபனிடம் இருந்த உண்மையைக் கண்டு மனம் மாறினான்.

அன்றே தனது திருட்டுத் தொழிலை விட்டுவிட முடிவெடுத்தான். அவர்களிடமிருந்து திருடிய பொருள்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டு நல்ல மனிதனாக மாறி உழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திரும்பிச் சென்றான், தனது கூட்டத்தையும் அழைத்துக்கொண்டு.



**செ.சிவகாமி**

**இளநிலை முதலாண்டு கனிணி பயன்பாட்டியல்**



# தன்னம்பிக்கை

ஒரு காட்டில் ஒரு சிங்கம் காட்டினைத் தன்னுடைய கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தது. அந்தக் காட்டில் வாழ்ந்த மற்ற மிருகங்கள் சிங்கத்தைப் பற்றித் தாழ்வாகப் பேசின. இது எப்படி ராஜாவாக இயலும் என்று. உடனே புலி 'நான் சிங்கத்தை விட இரண்டு மடங்கு பலமானவன். நான்தான் இக்காட்டிற்கு ராஜா' என்றது. புலி கூறியதை மறுத்து நீர்யானை 'சிங்கத்தின் உருவத்தை விடவும் அதனுடைய வாயை விடவும் நான் பலம் உடையவன், ஆதலால் நானே காட்டின் மன்னன்'என்றது. உடனே ஒட்டகம் 'நான் உயரமானவன், ஆதலால் நான் காட்டின் ராஜா' என்று கூறியது. அதற்குப் பெரிய வாய் உடைய முதலை 'என் வாய் பெரியது, நான் கடித்தால் அந்தச் சிங்கத்திற்கு மரணம் மட்டுமே' எனக் கூறியது. இதனையெல்லாம் கேட்டு விட்டு இறுதியாக யானை 'சிங்கத்தை விட எடை, உயரம் அனைத்திலும் அதனை விட அதிகமாக உள்ளேன். ஆதலால் நானே ராஜா ஆவேன்' என்று கூறி விட்டு அந்த இடத்திலிருந்து கிளம்பியது. இத்தனை மிருகங்கள் தன் பலத்தினைப் பற்றிக் கூறிவிட்டுச் சென்ற பிறகு, இது அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த நரி சிங்கத்திடம் போய் தான் கேள்வியுற்றதைக் கூறியது.

அடுத்த நாள் சிங்கத்தைத் தாக்குவதற்கு மிருகங்கள் காத்திருந்தன. சிங்கம் பயமின்றி வந்தவுடன் முதலை சிங்கத்தின் கால்களைக் கவ்வுகிறது, நீண்ட நேரம் கழித்துத் தப்பி வருகிறது. அடுத்ததாக நீர் யானை கடிக்க வருகிறது. தன்னுடைய காலால் எட்டி உதைத்து விட்டுச் சென்றது. யானை தனது தும்பிக்கை கொண்டு சிங்கத்தைத் தூக்கி வீசுகிறது. இதனையும் கடந்து சிங்கம் வந்தது. மறுபடியும் புலி தன்னுடைய கூர்மையான நகத்தால் சிங்கத்தைத் தாக்கியது, சிங்கத்தின் முகத்தில் இரத்தம் வழிகிறது, ஆனால் சிங்கம் பயம் கொள்ளாமல் நடந்தது. அப்போது அங்கிருந்த குரங்குக்கூட்டம் சிங்கத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறது. இதனைக் கவனித்த சிங்கம் தன் வீரத்தினைச் சோதிப்பதற்காகவே அனைத்து மிருகங்களும் இப்படி செய்தன என்பதைத் தெரிந்து கொன்டது. மறுபடியும் எல்லா மிருகங்களும் ஒன்று கூடி சிங்கத்தைத் தாக்கின. ஆனால் சிங்கம் போராடி அங்கிருந்த அனைத்து விலங்குகளையும் தூக்கி வீசியது. அன்றைய நாள் முடிந்தது. சிங்கம் குகையினுள் சென்றது. மற்ற மிருகங்கள் அனைத்தும் ஒன்று கூடி 'சிங்கம் நாளை காட்டிற்கு வராது. குகையினுள்ளே பிணமாகிவிடும்' என்று பேசிக்கொண்டன. அடுத்த நாள் காலை சிங்கம் முதல் நாள் பட்ட காயத்தோடும் முகத்தில் செங்குருதியோடும் துளி கூட பயமின்றி, தலை குனியாமல் நிமிர்ந்து வந்து கர்ஜித்தது. சிங்கம் கர்ஜித்தவுடன் அனைத்து மிருகங்களும் தொலை தூரம் ஓடி வேறு காட்டிற்கே சென்றன. சிங்கம் அதே காட்டில் கம்பீரமாகவும் களிப்போடும் வாழ்ந்தது.



**வி.கீர்த்தனா**
**இரண்டாமாண்டு இளங்கலை தமிழிலக்கியம்**



## கட்டுரை




# ஊரடங்கு தந்த பாடம்

**ஊரடங்கு கற்றுத் தந்த பாடம்**

உலகையே உலுக்கி எடுக்கும் கொரோனா பெருந்தொற்றுப் பரவலைத் தடுக்கும் வகையில் கடந்த ஆண்டு மார்ச் 22இல் அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தின் முதலாமாண்டு நினைவில், சவாலான இந்தக் காலத்தைத் திரும்பிப் பார்க்கலாம்.

கொரோனா பெருந்தொற்றில் இருந்து மீண்டு விட்டோம் என நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலைக்கு வந்து விட்டோமா என்பது தெரியவில்லை. ஆனால் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் நெருக்கடியான ஓராண்டை உலகம் கடந்து வந்திருக்கிறது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்காகக் கடந்த ஆண்டு மார்ச் 22ஆம் தேதி அமல் செய்யப்பட்ட

பொது முடக்கம், நமது வாழ்க்கையையே தலைகீழாகப் புரட்டிப் போட்டது.

பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, விமான பயணத்திற்குத் தடை விதிக்கப்பட்டு ஒவ்வொரு நாடும் தனித் தீவாக்கப்பட்ட நிலையில், அதுவரை சாதாரணமாகக் கருதப்பட்ட விஷயங்கள் கூட, சவால் மிக்கதாகி, வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கும் புதிய இயல்பு நிலை அறிமுகமானது.

கொரோனா பெருந்தொற்று உண்டாக்கிய புதிய யதார்த்தம், சோதனைகளையும், இன்னல்களையும் ஏற்படுத்தினாலும், பல விதங்களில் மனிதநேயத்தையும் வெளிப்படுத்தி, இருளுக்கு மத்தியில் நம்பிக்கை ஒளிக்கீற்றையும் தோன்றச் செய்தது.

கொரோனா பொது முடக்கத்தின் ஓராண்டு நிறைவில், இந்தச் சோதனையான காலத்தின் முக்கியமான நிகழ்வுகளை இக்கட்டுரையில் காண்போம்.

**உலகம் ஒரு கிராமம்**

2020இன் துவக்கத்திலேயே சீனாவில் ஒரு நூதன நோய் அந்நாட்டை உலுக்கிக் கொண்டிருந்தது என்பதை உலகம் அறிந்து கொண்டது. ஆனால் சீனாவின் வுஹான் மாகாணத்தை முடக்கிப் போட்ட இந்த வைரஸ் ஒரே ஊரில் மட்டும் நிலைத்து நிற்கப்போவதில்லை. உலகளவில் உலுக்கி எடுக்கப் போகிறது என்பதை அடுத்த சில வாரங்களில் உலகம் உணர்ந்தது.

விமானப் பயணங்களைத் தவிர்க்கும் வகையில் சர்வதேசக் கண்காட்சிகள் போன்றவை முதல் கட்டமாக ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல்வேறு கட்டுப்பாடுகள் அடுத்தடுத்து விதிக்கப்பட்டன. இந்த நிகழ்வுகள் எல்லோருக்கும் அச்சத்தை ஏற்படுத்தினாலும், காத்திருந்த விபரீதத்தைப் பலர் உணரவில்லை.

ஆனால் கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவும் பெருந்தொற்றாக உருவாகி இருக்கிறது என உலக சுகாதார அமைப்பு அறிவித்த போது, பேண்டமிக் எனப்படும் பெருந்தொற்றின் தீவிரத்தை உலகம் உணர்ந்தது.

அனைவரும் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அனைவரும் அவரது நேரங்களைத் தனது குடும்பத்துடன் செலவழிக்கத் தொடங்கினர்.

இறந்து போனவர்களின் உடல்களைச் சரியான முறையில் அடக்கம் செய்ய முடியாமல் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் உறவினர்களின் கண்ணீரும் கதறலும் நெஞ்சை உலுக்கியது. இந்நிலையில் அவர்களது மனிதநேயம் வெளிப்பட்டது.

**இத்தாலிய சோகம்**

கொரோனா வைரஸ் சீனாவில் உருவாகி மற்ற நாடுகளுக்குப் பரவுவதாகச் சொல்லப்பட்டாலும், இந்த வைரஸிற்கு முதலில் அதிக விலை கொடுத்தது இத்தாலிதான். வைரஸ் பரவலைத் தடுக்க கட்டுப்பாடு தேவை எனச் சொல்லப்பட்டதை, சராசரி மக்கள் அலட்சியம் செய்து வழக்கம்போல நடமாடியதன் விளைவாக, அந்நாட்டின் தொற்றுப் பாதிப்பு தீவிரமாகி நோயாளிகளால் மருத்துவமனைப் படுக்கைகள் நிறையத் துவங்கின.

வைரஸின் தீவிரத்தால் நூற்றுக்கணக்கானோர் பலியாகத் துவங்கி உலகில் சிறந்த மருத்துவக் கட்டமைப்பைக் கொண்ட நாடுகளில் ஒன்று எனச் சொல்லப்படும் இத்தாலி, தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாமல் திணறியது.

மருத்துவமனைப் படுக்கைகளில் துவங்கி சுவாசக்கருவி வரை பற்றாக்குறை நிலவியதைப் பார்த்தபோது நிலைமை கட்டுக்குள் இல்லை என்பதை மற்ற நாடுகள் உணர்ந்து கொண்டன.

**பொது முடக்கம் (லாக்டவுன்)**

இத்தாலியை அடுத்து ஜெர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட, கொரோனா பரவலைத் தடுக்க பொதுமுடக்கமே சிறந்த வழி எனத் தீர்மானமானது. விளைவு, பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, மால்களும், சினிமா திரையரங்குகளும் மூடப்பட்டன. பள்ளிகளும், கல்லூரிகளும் கூட மூடப்பட்டன.

வீட்டுக்குள்ளே இருங்கள். அதுவே பாதுகாப்பு எனச் சொல்லப்பட்டது. பொதுமுடக்கத்தை அறிவித்த நாடுகளின் பட்டியலில் மார்ச் மாதம் இந்தியாவும் இணைந்தது. உலகம் முழுவதும் முடங்கிக் கிடந்தது. இப்பொழுது இந்தியாவும் இப்பட்டியலில் இணைந்தது.

**இல்லத்திலிருந்தே பணி**

இணையம் என்பது வரம் எனச் சொல்லப்பட்டாலும் இது எத்தனை உண்மை என்பதை எல்லோரும் உணரும் வாய்ப்பைப் பொது முடக்கச் சூழல் உண்டாக்கியது. அலுவலகத்திற்குச் செல்ல முடியாத நிலையில் நிறுவனங்கள் வீட்டில் இருந்தே பணியாற்றும் வாய்ப்பை ஊழியர்களுக்கு வழங்கின.

லேப்டாப்பும், இணையமும் இருந்தால் வீட்டில் இருந்தே வேலை பார்த்துக் கொள்ளலாம் என்பது பெரும் ஆறுதலாக அமைந்தது. பணிகள் எல்லாம் ஒரேயடியாக முடங்கிப் போய்விடும் அபாயத்தையும் தடுக்க உதவியது. திடீரெனப் பார்த்தால் வொர்க் ∴ப்ரம் ஹோம் என்பது நம் காலத்துக் கருத்தாக்கமாக மாறியது

**இணையக் கல்வி**

வீட்டில் இருந்தே பணி செய்வது போலவே, மாணவர்கள் வீட்டில் இருந்தே பாடம் படிப்பதையும் இ-லேர்னிங் எனப்படும் இணையக் கல்வி சாத்தியமாக்கியது. மூட்டை போல பாடப்புத்தகங்களைச் சுமந்து சென்று கொண்டிருந்த மாணவர்கள், வீட்டில் இருந்தே லேப்டாப் அல்லது ஸ்மார்ட்போனில் ஜூம் வழியே ஆசிரியர்கள் பாடம் நடத்துவதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

இணையக்கல்வி மாணவர்களுக்குப் பழக்கமாக மாறியது. ஒரு நாளாவது பள்ளிக்குச் செல்லமாட்டோமா என்ற ஏக்கம் மாணவர்களிடையே உருவாகியது.

**இணையம்**

இணையம் நம் வாழ்க்கையில் ஒரு அத்தியாவசியத் தேவையானது. இணையம் நம் வாழ்வில் இணைந்தது. நாம் அனைவரும் குடும்பத்தோடு பாதி நேரத்தையும் இணையத்தோடு பாதி நேரத்தையும் செலவழித்தோம்.

**நூதன தண்டனை**

பொது முடக்கம், சமூக இடைவெளியைக் கடைபிடிப்பதை அவசியமாக்கிய நிலையில், இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகப் பலரும் படைப்பூக்கம் மிக்க வழிகளை நாடினர். படைப்பாளிகள் பலர், ஓவியங்கள், வீடியோக்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். காவல் துறையினரும் புதுமையான வழிகளில் விதிமுறைகளை வலியுறுத்தினர். விதிகளை மீறுபவர்களுக்குத் தண்டனை அளிப்பதிலும் புதுமையைக் கடைபிடித்தனர்.

**அறிவியலே துணை**

கொரோனா பெருந்தொற்று பேரச்சத்தை உண்டாக்கியதோடு, வதந்திகளுக்கும் வழி வகுத்தது. வைரஸ்

உருவான விதத்தில் துவங்கி, அது பரவும், பாதிக்கும் விதம் எனப் பல விதங்களில், வதந்திகளும் பொய்ச்செய்திகளும் உலா வரத்தொடங்கின. இதனால் உண்டான பெருங்குழப்பத்திற்கு மத்தியில் அறிவியலே வழிகாட்டியாக விளங்கியது.

கொரோனா வைரஸின் தன்மை குறித்த உண்மை விவரங்களை வல்லுனர்களும், மருத்துவர்களும் அறிவியல் பூர்வமான விளக்கமாகக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். யார் சொல்லையும் நம்ப வேண்டாம். மருத்துவர்கள் வல்லுனர்கள் என்ன சொல்கின்றனர் என்பதைக் கவனியுங்கள் என்பதே வழிகாட்டும் கருத்தாக அமைந்தது.

**இந்திய வணக்கம்**

கொரோனா தொற்றால் இந்தியாவும் பாதிக்கப்பட்டாலும் உரிய நேரத்தில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது. நிலைமை மோசமாக மாறாமல் தடுக்க உதவியது. அது மட்டுமல்ல. சமூக இடைவெளியைப் பின்பற்றுவது புதிய நடைமுறையாக மாறிய சூழலில் கைகுலுக்கும் பழக்கம் கைவிடப்பட்டது. இந்நிலையில் இந்தியர்களின் பாரம்பரியமான கைக்கூப்பி வணக்கம் சொல்லும் நடைமுறை பாராட்டைப் பெற்றது. இதே போல ஜப்பானியர்களின் தலை வணங்கிச் சொல்லும் முறையும் ஏற்றதாகக் கருதப்பட்டது. அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியா வந்தபோது நமஸ்தே சொன்னதும் பிரபலமானது.

**பழைய நினைவுகள்**

பொது முடக்கம் எல்லோரையும் வீட்டுக்குள்ளேயே இருக்கச் செய்வதாக அலுப்பூட்டுவதாக அமைந்தாலும், இதனால் கிடைத்த நேரம், குடும்பத்தினர் தங்களை இன்னும் நெருக்கமாக உணர்ந்து கொள்ளும் வாய்ப்பையும் கணவனும், மனைவியும் பெற்றோர்களும், பிள்ளைகளும் தங்களுக்குள் பேசிக் கொள்ளவும் வாய்ப்புகளையும் தந்தது. பலரும் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு மகிழ்ந்தனர்.

பண்டைய காலத்து விளையாட்டுகள் தாத்தா பாட்டிகளின் மூலம் வெளிவந்தன. அந்தக் காலத்தின் பெண்களின் விளையாட்டு எனக் கருதப்படும் தாயம், பல்லாங்குழி போன்றவற்றை வீடுகளில் விளையாடினர்.

**கற்றல் இனிது**

மாணவர்கள் மட்டும் இணையக் கல்வியில் ஈடுபடவில்லை, ஆர்வம் உள்ள பலரும் ஓய்வாகக் கிடைத்த நாட்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஆன்லைன் பயிற்சி வகுப்பில் சேர்ந்தனர். சிலர் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் வகுப்புகளை நாடினர் என்றால் மற்றவர்கள் தங்களுக்கு ஆர்வம் உள்ள விஷயங்களைக் கற்றுக் கொண்டனர்.

**நடையாய் நடந்து. . .**

நடுத்தர மக்கள் பொது முடக்கப் பாதிப்பைத் தட்டுத்தடுமாறிச் சமாளித்தாலும், விளிம்பு நிலை மக்கள் திக்கு முக்காடிப்போயினர். அதிலும் குறிப்பாகப் பணி நிமித்தமாக நகரங்களுக்கு வந்திருந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்றனர். போக்குவரத்து இல்லாத நிலையில், அவர்கள் கால் வலிக்க பல மைல்கள் நடந்தே சென்றது தேசத்தின் மனசாட்சியை உலுக்கியது.

இந்தச் சிக்கலுக்கு நடுவே பல நல்ல உள்ளங்கள் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவி நிவாரணம் அளித்தனர்.

**எல்லாம் மெய்நிகர் வடிவமாயின**

ஜூம் போன்ற வீடியோ சந்திப்புச் சேவைகள் பிரபலமான நிலையில், இலக்கியக் கூட்டங்களும், கண்காட்சிகளும் கூடு மெய்நிகர் வடிவமெடுத்தன. பேஷன் நிகழ்ச்சிகளும் பயிலரங்குகளும் இணையத்தில் திட்டமிடப்பட்டு மெய்நிகர் வடிவில் நடைபெற்றன. யுவஸ்டோரியின் டெக் மாநாடு உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் இணையம் வழியே நடத்தப்பட்டன.

**டிஜிட்டல் வங்கி**

பணமதிப்பு மிக்க நடவடிக்கையின் விளைவாக டிஜிட்டல் பரிமாற்றத்தின் அருமையை உணர்ந்திருந்த இந்தியர்களுக்குக் கொரோனா சூழலில் டிஜிட்டல் பணப் பரிமாற்ற வசதி பேருதவியாக அமைந்தது. இதற்கு மேலும் உதவும் வகையில் வங்கிகள், காண்டாக்ட்லெஸ் பரிவர்த்தனையையும் அறிமுகம் செய்தன. ஏடிஎம் மையத்திற்குச் சென்றாலும் இயந்திரத்தில் கையை வைக்காமல் செயலி வழியே பணம் எடுக்க முடிந்தது.

**மினிமலிசம்**

பொது முடக்கச் சூழல் பணியிழப்பு மற்றும் ஊதியக் குறைப்புக்கு வித்திட்டதால் பலரும் சிக்கனத்தின் அருமையை உணர்ந்தனர். புதிய சூழலில் ஆடம்பரங்களைக் கைவிட்டு, அத்தியாவசியத் தேவையை உணர்ந்து கொண்டனர். பலரும் வீண் செலவுகளைத் தவிர்த்தனர். போதும் என்ற மனமே முக்கியம் என்பதைப் பலரும் உணர்ந்தனர்.

எந்தவித வீண் செலவுகளையும் முழுவதுமாகத் தவிர்த்தனர். தேவைக்காக மட்டுமே வெளியே சென்றனர். தேவையான செலவுகளை மட்டுமே செய்தனர். அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் வீடுகளைத் தேடி வந்தன. வாழ்க்கை மிகவும் எளிதாக மாறியது.

**தடுப்பூசி நம்பிக்கை**

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த தடுப்பூசியே சிறந்த வழி எனக் கருதப்பட்ட நிலையில் செயல்திறன் வாய்ந்த உருவாக்கத்திற்குத் தேவைப்படக் கூடிய காலம் அச்சுறுத்தியது. இந்தப் பின்னணியில் மருத்துவ வல்லுனர்கள், ஆய்வாளர்கள் அறிவியல் துணையோடு விரைந்து செயல்பட்டு வரலாறு காணாத வேகத்தில் தடுப்பூசியைக் கண்டுபிடித்தனர். இந்தியாவும் தன் பங்கிற்குத் தடுப்பூசியைக் கண்டு பிடித்தது. மற்ற நாடுகளுக்கும் வழங்கி வருகிறது.

**முடிவுரை**

குடும்பத்தின் முக்கியத்தையும் அன்றாட வாழ்வில் நாம் இழக்கும் சிறிய சந்தோஷங்களைப் பற்றியும் இந்த ஊரடங்கு புரிய வைத்துள்ளது.




**வி. தர்ஷினி**
**இளங்கலை இரண்டாமாண்டு ஆங்கிலம்**
**பிரிவு அ**



கட்டுரை



## வைரஸின் வரவும், வாழ்க்கை மாற்றமும்

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை

மனிதநேயத்தைக் கற்றுக் கொடுத்தல்

உயிர் எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்குச் சுகாதாரமும் தூய்மையும் அவ்வளவு முக்கியம் என்று கற்றுக் கொடுத்தல்

இழந்ததை மீட்டெடுத்தல்

மக்களின் பாதிப்பு

முடிவுரை

**முன்னுரை**

கடந்த இரண்டு வருடங்களாகக் கொரோனா வைரஸ் பாதிப்பால் பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. கொரோனாவால் உலகம் முழுவதும் அதிகமான உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. மனிதர்களின் அன்றாட நிலை பாதிக்கப்பட்டுள்ளது. நமது பல தேவைகளுக்காக தெரிந்தே நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், நமது சுற்றுச்சூழல் என அனைத்தையும் மாசுபடுத்துகிறோம். இதற்கான பின்விளைவுகளை நாம் மனிதர்கள் மட்டும் அல்ல அனைத்து உயிரினங்களும் அனுபவிக்கின்றன. இந்தக் கொரோனா பாதிப்பினால் முதலில் பாதிக்கப்பட்ட நாடான சீனா, அசாதாரணமாக இருந்ததால்தான் இப்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. இக்கட்டுரையில் கொரோனா கற்றுத் தந்த பாடத்தைக் காண்கிறோம்.

**மனித நேயத்தைக் கற்றுக் கொடுத்தல்**

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லாமல் இரவும் பகலும் தன் உயிரைக் கூட பொருட்படுத்தாமல் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளித்தனர். இவர்கள் மட்டுமல்லாமல் காவல் துறையினர், துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் சமூகத்தின்மீது அக்கறை கொண்டவர்கள், இவர்கள் அனைவரும் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் கவலைப்படாமல் செயல்படும் அனைவருமே கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்திக் கொண்டவர்களுக்கு உணவு, தேவையான மருந்து என இது போன்ற மக்களின் தேவைகளைத் தாமே முன் வந்து உதவி செய்தனர்.

**தூய்மையின் இன்றியமையாமையைக் கற்றுக்கொடுத்தல்**

கொரோனா காலத்தில் வெளியே செல்லும்போது மிகவும் அவசியமாக முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். முக்கியமான காரணங்களுக்காக மட்டுமே வெளியே செல்ல வேண்டும். அவசியமில்லாத காரணங்களுக்காக வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதும் வெளியில் சென்று வந்த பிறகும், செல்லும்போதும் நன்றாகக் கைகளை சானிடைசர் (அல்லது) சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். வீதிகளில் குப்பைகளைச் சேராமல் வாரத்திற்கு ஒருமுறை தூய்மைப்படுத்தி, கிருமிநாசினியைத் தெளிப்பார்கள். முதல் அலையின்போது மக்களின் அலட்சியம் காரணமாக உயிர்இழப்பு மிகவும் அதிகமாக ஏற்பட்டது. இரண்டாவது அலையின்போது கொரோனாவிற்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மூன்றாவது அலை வராமல் தடுப்பதற்காக மக்கள் அனைவருக்கும் இலவசத் தடுப்பூசி போடப்பட்டது. தற்போது உள்ள சுகாதாரத்துறை அமைச்சர் மூன்றாவது அலை கொரோனா வந்தாலும் எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளோம் என்றார். அதற்கான ஆதரவு முழுவதும் மக்களிடமே உள்ளது. இதனால், உயிர் எவ்வளவு முக்கியமோ, அந்தளவிற்குச் சுகாதாரமாக இருப்பதையும், தூய்மையாக இருப்பதையும் முக்கியம் என்று கொரோனா நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளது,

**இழந்ததை மீட்டெடுத்தல்**

கொரோனா ஊரடங்கு காரணமாக வெளியூரில் வேலை பார்க்கும் மக்கள், அவரவர் ஊரைத் தேடிச் சென்றனர். அங்கு விட்டுப்போன உறவுகளையும் பாதுகாத்தனர். தாய் தந்தையின் அன்பையும், உறவினர்களின் அரவணைப்பையும் புரிந்து கொள்ள முடிந்தது. வெளியூர்களிலிருந்து வந்து சொந்த ஊரில் இருப்பவர்கள் தந்தையின் தொழிலைத் தன் தொழிலாக மாற்றி அவர்களுக்கு ஓய்வு கொடுத்தனர். தோட்டங்கள் மூலம் தேவையான காய்கறிகளைப் பயிரிட்டு அதன்மூலம் இயற்கையான உணவுகளை உண்டு மகிழ்ந்தனர். கொரோனாவிற்கு எதிரான நாட்டுமருந்துகளை மக்கள் பயன்படுத்தினார்கள். கசாயம் வீட்டிலேயே காய்ச்சித் தினமும் குடித்து வந்தனர்.மூலிகைகள் மூலம் ஆவி பிடித்தல் போன்ற பழைய பழக்கவழக்கங்களை மீண்டும் கொண்டு வந்தனர். கிராமங்களில் மட்டுமல்லாமல் நகரங்களிலும் தாயம், பரமபதம், பல்லாங்குழி, வீட்டிலேயே யோகா மற்றும் உடற்பயிற்சி இது போன்ற அனைத்து விளையாட்டுகளையும் விளையாடி மகிழ்ந்தனர். அது மட்டும் இல்லாமல் விதவிதமான உணவுகளை வெளியே சென்று வாங்கி வராமல் வீட்டிலேயே சமைத்து உண்டனர். அப்படி மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள உயிரினங்களுக்கு அவர்களே திண்பண்டங்கள் வாங்கிக் கொடுக்கின்றனர். மக்கள் வசிக்கும் இடங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள உயிரினங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வசித்து வருகின்றன.

**மக்களின் பாதிப்பு**

கொரோனாவின் காரணமாக அரசாங்கம் ஊரடங்கு அறிவித்தது. அதன் காரணமாக நடுத்தர மக்களின் பாதிப்பானது மிகவும் கொடுமையாக இருந்தது. தினக்கூலிக்காரர்கள் மிகவும் கஷ்டத்தில் இருந்தனர். காய்கறிகள் வாங்குவதற்கு கூட வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளார்கள்.குழந்தைகளின் பள்ளி வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் அதிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாலும், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டதாலும், பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. கொரோனாவால் நிரந்தரமான சமூகப் பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்படுத்திக்கொள்வது தொடுவது, நம்மைத் தற்காத்துக் கொள்வதற்கான நடைமுறைகளாகும். அடிக்கடி கைகளைக் கழுவவும். தும்மலின் போது துணியை வைத்துப் பயன்படுத்தவும், பயன்படுத்திய துணியை முறையாக அப்புறப்படுத்திவிட்டுக் கைகளைக் கழுவவும். கையை மூக்கு, கண் மற்றும் வாய் பகுதி அருகே எடுத்துச் செல்வதைத் தவிர்க்கவும், முக்கியமாக உடல்நிலை சரியில்லாத நபர்கள் அருகே நெருக்கமாகச் செல்வதைத் தவிர்க்கவும். மாணவர்கள் ஆன்லைன் வகுப்புகள் மூலம் மிகவும் வருத்தமடைந்துள்ளனர். அவர்களுக்குக் கண் பாதிப்பு, மனநல பாதிப்பு, தலைவலி மற்றும் மனஅழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். இதனால் மாணவர்களின் படிப்பும் ஆர்வமும் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

**முடிவுரை**

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்.

என்று அனைவரிடமும் அன்பு காட்டக்கூடிய காலமாய் மாறியது இந்தக் கொரோனாக் காலம். எப்போதும் நாம் நம்மைத் தூய்மையாக வைத்துக் கொள்வது அவசியம். தன்னலம் இல்லாமல் பொதுநலச் சிந்தனையுடன் செயல்படும் அனைவரும் கதாநாயகர்களே. இருப்பினும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமக்குப் பேருதவி செய்த அனைவரையும் மறவாமல், அவர்களின் நல்லறிவுரையைப் பின்பற்றி நாடும் வீடும் நலம் பெற வாழ்வோம்!!! வாழ்வோமாக!!!

விழித்திரு! விலகியிரு! வீட்டிலேயே இரு!



**ஆ.திவ்யா**
**இளநிலை இரண்டாமாண்டு வணிக மேலாண்மையயில்**



## கட்டுரை



# இணைய வாழ்க்கை

**முன்னுரை**

2020ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டாக வரலாற்றில் பதிவாகியுள்ளது. உலக மக்கள் அனைவருக்கும் பல கசப்பான அனுபவங்கள், கடுமையான சவால்களைத் தந்த கோவிட்--19 கிருமித் தொற்றின் கோரத்தாண்டவம் அரங்கேறிய ஆண்டு இது உங்களைச் சுற்றிப் பாருங்கள். உங்களுக்கே தெரியும், சமூகம் கண்டுள்ள மாற்றங்கள். 2020ஆம் ஆண்டு முதல் காலாண்டு வரையில் எப்படி இருந்தோமோ அதற்கும் தற்போது உள்ள நிலைக்கும் எவ்வளவு தூரம் நாம் பயணம் செய்துள்ளோம் என்று நம்மால் உணர முடிகிறது. உயிர் பயம் என்றால் என்ன என்பதைப் பலவிதமான சங்கதிகளின்வழி மனித குலத்திற்கு அறைகூவல் விட்டிருக்கிறது கொரானா எனும் நோய்த் தொற்று. இந்தியக் கலாசாரத்திலேயே ஊறிப்போன தனி மனித ஒழுக்கம், உணவுமுறை, கைகால் கழுவுதல், கைக் கூப்புதல், தள்ளி நின்று பேசுதல் உள்பட பல வாழ்வியல் நெறிகளை உலக நாடுகள் எல்லாம் திரும்பிப் பார்க்கும்படி வைத்திருக்கிறது.

**கொரானா கற்றுத் தந்த பாடம்**

பணம்தான் வாழ்க்கை பணமிருந்தால் உறவுகளும் உணர்வுகளும் தேவையில்லை என்று உல்லாசமாய் இருந்தவர்களின் இறுமாப்பை இந்த நுண்கிருமி ஒடுக்கி இருக்கிறது திரையரங்கம், பெரிய நட்சத்திர விடுதி, பிரம்மாண்டமான கடைகள் போன்ற இடங்களுக்குச் செல்லாமல் வாழமுடியும் என்பதைப் புரிய வைத்தது. மதுக்கடைகளை மூட வைத்துக் குடும்ப உறவுகளின் மதிப்பினை உணர்த்தியது.

அரசு என்றால் என்ன? அதன் பொறுப்புகள் என்ன? திட்டங்களை எப்படி வகுப்பது? எப்படிச் செயல்படுத்துவது என்பதை வருகிற தலைமுறையினருக்குக் கொரானா கற்றுத் தந்ததுசினிமாவிலும், பத்திரிக்கையிலும், நகைச்சுவையாய்ப் பார்க்கப்பட்ட செவிலியர்களும்மருத்துவர்களும் துாய்மைப் பணியாளர்களும் கடவுள்களாகப் போற்றப்பட்ட நிலை உருவானது. ஆணவம், ஆசை, அக்கிரமம், அநீதி அதிகரித்தால் நான் அவதரித்து அவற்றை அழிப்பேன் என்று சொன்ன கல்கியின் அவதாரம்தான் கண்ணுக்குத் தெரியாமல் கண்ணாமூச்சி ஆடிய இந்தக் கொரானா.

ஒரே மொழி, ஒரே இனம், ஒரே மதம் என்றிருக்கக்கூடிய சின்னச் சின்ன நாடுகளில் கூட காணமுடியாத ஒற்றுமையை வெவ்வேறு மொழிகள், வெவ்வேறு இனங்கள், வெவ்வேறு மதங்கள் இருக்கிற மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்திய தேசம் மீண்டும் உலக அரங்கில் மெய்ப்பிக்கக் காரணம் ஆக இருந்தது இந்தக் கிருமி.

**ஊரடங்கு கற்றுத் தந்த பாடம்**

உலகின் வல்லரசு நாடுகளில் கூட அதன் தலைவர்கள் சொல்வதை மதித்துக் கேட்டு மக்கள் நடந்துகொள்ளவில்லை. எடுத்துக்காட்டு அமெரிக்கா, இத்தாலி முதலிய நாடுகள். ஆனால் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தால் என்ன? எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால் என்ன? எந்த கட்சியைச் சேர்ந்தவராக இருந்தால் என்ன? இவர் எங்கள் பிரதமர், அவர் சொல்வதைக் கேட்போம் என்று ஒட்டுமொத்தத் தேசமும் ஒற்றுமையாய், ஓரணியாய், இந்தக் கொடிய நோய் சவாலை எதிர்கொண்டது.

இதை உலக நாடுகளே விழிகளை விரித்து வியக்கின்றன. வேற்றுமையிலும் ஒற்றுமை இருந்தால் என்னை வீழ்த்தலாம் என்பது கொரானா நம் இந்தியன் ஒவ்வொருவர் காதிலும் சொன்ன உபாய மந்திரமல்லவா? வீட்டுக்கு வெள்ளையடிக்கும்போது வீட்டுக்குள் இருக்கும் எல்லாப் பொருள்களும் வெளியேற்றப்பட்டு வீட்டின் ஒட்டடை அழுக்குகள் அகற்றப்படும். பின்பு சுத்தமான வீட்டுக்குள் எவை தேவையோ அவற்றை மட்டும் கொண்டு சென்று தேவையில்லாதவற்றைத் தூக்கி எறிவோம். அதுபோல நம்மால் மாசுபடுத்தப்பட்ட இந்த உலகுக்கு வெள்ளையடிக்க வேண்டாமா? உலகைச் சுத்தப்படுத்த வேண்டாமா? இயற்கையை ? விலங்குகளை, காற்றை, நீரை , ஆகாயத்தை எவ்வளவு மாசுபடுத்தியிருப்போம் ? பஞ்சபுதங்கள் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டாமா? அதற்கான முயற்சிதான் இந்தக் கிருமியின் வரவோ? சொல்லித் திருந்துபவன் அல்ல மனிதன். எனவே அவனின் உயிரைப் பறித்து அச்சமூட்டித் திருத்த முயற்சித்தானா இறைவன்? இயற்கையைக் காப்பாற்றுங்கள், விலங்குகளை வாழவிடுங்கள், உறவுகளைப் போற்றுங்கள். பணம்தான் வாழ்க்கை என்ற கொள்கையைத் தூக்கிப் போடுங்கள், தேவைகளைக் குறையுங்கள்என்ற நெறியே சிறந்தது என்பதை உணருங்கள். இதுவே கொரானா ஊரடங்கு கற்றுத் தந்த பாடம்.

**கொரானா வைரஸ் நோய்த் தொற்று**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்கிறது குறள்.

நோய் என்ன, நோய்க்கான காரணம் என்ன, நோய் தீர்க்கும் வழி என்ன என்று முறையாக ஆராய்ந்து சிகிச்சை அளிக்க வேண்டும் என வள்ளுவரின் குறள் சொல்கிறது. இருபத்தியோராம் நூற்றாண்டு அறிவியலும் அதையேதான் சொல்கிறது. ஆனால் பல லட்சம் உயிர்களைப் பலிவாங்கி உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும் ஒரு பெருந்தொற்று நோயினைப் பற்றி நாம் இன்னும் முழுதாக அறியவில்லை. தினம் உருமாற்றம் அடையும் வைரஸ் தொடங்கி கருப்புப் பூஞ்சை வரை நோய் பற்றிய முழு புரிதலே இன்னும் கிட்டியபாடில்லை. நோய்க்கான காரணம் ஒன்றரை வருடங்கள் தாண்டியும் கேள்விக்குறியாக இருக்கிறது. இன்னும் நோய் தீர்க்கும் வழியும் ஐயமின்றித் தெளிவுபடுத்தப்படவில்லை.

கொரானா வைரஸ் என்பது வைரஸ்களின் ஒரு மிகப் பெரிய குடும்பமாகும். இது சாதாரண ஜலதோஷத்திலிருந்து மிகவும் கடுமையான நோய் ஆகும். மூச்சுக்குழல் அழற்சி, நிம்மோனியா அல்லது கடுமையான சுவாச நோய்க்குறி போன்ற நோய்களை ஏற்படுத்தும் .இந்நோய் சீனாவில் உள்ள ஹீபெய் அதாவது வுஹான் எனும் பிராந்தியத்தில் தோன்றியது.

**அறிகுறிகளும் பாதுகாப்பு முறைகளும்**

கொரானாவின் அறிகுறி மிதமான காய்ச்சல் மற்றும் சாதாரண சுவாசத் தொற்றுகள் போன்றவற்றிலிருந்து தீவிரமானவையாக இருக்கும். மூச்சுவிடுதலில் சிரமம் இருக்கும். மேலும் இது ஒரு நபரிடம் இருந்து மற்றொரு நபருக்கு நெருங்கிய தொடர்பின் மூலம் பரவுகிறது. இந்நோய் வராமல் தடுக்கும் முறைகளைப் பின்பற்ற வேண்டும். சோப்பு மற்றும் தண்ணீர் அல்லது ஆல்கஹால் சேர்ந்த கைச் சுத்திகரிப்பு மூலம் உங்கள் கைகளிலேயே தும்மவும் மற்றும் இருமவும் வேண்டும். உங்கள் கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொடுவதையும் தவிர்க்கவும். நோய்வாய்ப்பட்டவர்களுடன் பழகுவதைத் தவிர்க்கவும். இந்நோய் ஏற்பட்டவரை வெளியில் செல்வதைத் தடுத்து வீட்டிலேயே தனிமைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

**பொதுமுடக்கம்**

இத்தாலியை அடுத்து ஜெர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டன. கொரானா பரவலைத் தடுக்கப் பொது முடக்கமே சிறந்த வழியானது. விளைவு பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு மால்களும், சினிமாத் திரையரங்குகளும் மூடப்பட்டன. பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன.

**கல்வி முடங்கவில்லை**

2020இன் துவக்கத்திலேயே சீனாவில் ஒரு நூதன வைரஸ் அந்நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கிறது என்பதை உலகம் அறிந்துகொண்டது. ஆனால் சீனாவின் வுஹான் மாகாணத்தை முடக்கிப்போட்ட இந்த வைரஸ் ஒரு இடத்தில் மட்டுமின்றி உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி மக்களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தியது.

இதன் விளைவாக விமானப் பயணங்கள் தவிர்க்கப்பட்டன. பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கற்றல் மட்டும் முடங்கவில்லை. கற்றல் இனிதாய் இணையவழியில் தொடர்ந்தது. மேலும் பொதுமுடக்கம் எல்லாரையும் வீட்டுக்குள்ளேயே இருக்கச் செய்து அலுப்பூட்டுவதாக அமைந்தாலும் இதனால் கிடைத்த நேரம் குடும்பத்தினர் தங்களை இன்னும் நெருக்கமாக உணர்ந்துகொள்ள வழிசெய்தது. கணவனும், மனைவியும், பெற்றோர்களும், குழந்தைகளும் தங்களுக்குள் பேசிக்கொள்ளவும், பழைய நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

**முடிவுரை**

கொரோனா என்னும் கொடிய நோயினால் மனிதம் உணர்ந்து செயல்படுகிறோம். மக்களின் தேவை பணம் மட்டுமில்லை என்பது தெளிவான புரிதலாக இருக்கின்றது. உறவுகளின் உன்னதத்தையும், மனிதர்களின் தேவையையும் புரிய வைத்திருக்கிறது.

**ஜி. சுவேதா**

**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல் ஆ பிரிவு**





## கட்டுரை



# முயற்சி திருவினையாக்கும்

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை

முயற்சியும் முன்னேற்றமும்

முயற்சியைச் செய்தவர்கள்

செய்தொழிலின் சிறப்பு

முடிவுரை

**முன்னுரை**

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார், முயன்றால் முடியாதது இல்லை முயற்சி திருவினையாக்கும். முயற்சி இன்மை இன்மை புகுத்தி விடும் என்ற தொடர்கள் முயற்சியின் பயன்களை எடுத்துரைக்கின்றன. வரலாறுகளிலும் பழங்கதைகளிலும் முயற்சியினால் தங்கள் எண்ணங்களை ஈடேற்றிக் கொண்டவர்களைக் காண்கிறோம்.

**முயற்சியும் முன்னேற்றமும்**

பழங்காலத்தில் வாழ்ந்த இராஜஇராஜச்சோழன் அவர் தன்னுடைய சுயமுயற்சியைக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். பின்பு தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.

புத்தர் தவம் இயற்றும்போது எத்தனையோ இன்னல்களைக் கடந்தன்றோ இன்று ஆசியாவின் ஜோதியாக ஒளிவிளக்காய்ப் போற்றப்படுகின்றார். நான்கு வயதிலிருந்து விடாமுயற்சி செய்து இருபத்தைந்து வயதில் உலகளவில் டென்னிஸ் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார் சிமோனா ஹலேப்.

பிறந்த ஆண்டைக் கூட கணக்கிட முடியவில்லை, ஆனால் புவி முழுவதும் நிறைந்திருக்கிறது, அவருடைய கருத்துக்கள். அவர்தான் திருவள்ளுவர். பனை ஓலைகளில் இருந்த நூல்களைக் காப்பாற்றிப் பதிப்பித்து நூலாக வெளியிட்டவர் தமிழ்த் தாத்தா உ.வே.சா. விடாமுயற்சியின் காரணமாக இந்திய ஏவுகணை மனிதனாகத் திகழ்ந்தவர் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.

**முயற்சியைச் செய்பவர்கள்**

கடிகாரத்தின் நோக்கம் எது? அது யாருக்காகவும் நிற்காது. அதன் முள் ஓடிக்கொண்டேதான் இருக்கும். சூரியனின் வேலை எது? அது ஒளி கொடுத்துக்கொண்டேதான் இருக்கும். சிலந்தி கற்பித்த பாடத்தால் இராபர்ட் புரூஸ் என்னும் மன்னன் இறுதியாக வெற்றி பெற்ற வரலாற்றை எல்லோரும் அறிந்து இருக்கின்றோம். கீழே வளரும் வேரின் முயற்சியே மேலே வளரும் ஆலமரத்தின் தோற்றம் ஆகும்.

**முயற்சியால் இன்னல்களை வென்றவர்கள்**

முயற்சியால் அறிஞர்கள் நிறைவேற்றியவை பற்பல. முயற்சி இல்லையென்றால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைத் தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடித்திருக்க முடியாது. உலக உத்தமர் காந்தியடிகள், கப்பல் ஓட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், அரிய பெரிய அறிவியல் நன்மைகள் பலவற்றை நாட்டிற்கு வழங்கிய மனிதர் கோவை ஜி.டி.நாயுடு வீதி விளக்கில் படித்து நீதிபதியான முத்துசாமியார், உலகம் போற்றும் வீரன் நெப்போலியன், மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி ஆகிய இவர்களின் உடல்கள் அழிந்தும் வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியே ஆகும். இவர்களின் முயற்சிக்கிடையே ஏற்பட்ட இன்னல்கள் கட்டுக் கடங்காதவையாகும். அவற்றை வென்று வெற்றி பெறுவதற்கு அவர்களின் முயற்சியே காரணமாகும்.

**செய்தொழிலின் சிறப்பு**

உள்ளத்தில் முயற்சி உறுதியாக இருக்கும் அளவிற்கு உணர்வும் இருக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். உழவரின் முயற்சியால் பயிரும், நெசவாளர்களின் முயற்சியால் மானம் காப்பாற்றப்படலும், சிற்பியின் முயற்சியால் சிலையும், பாவலரின் முயற்சியால் காவியமும், ஓவியரின் முயற்சியால் உருவமும் உருவாகி உயர்கின்றன. மக்கள் பிறக்கும்போது குழந்தைகளாகப் பிறக்கின்றனர். ஆனால் இறக்கும் போதோ சிலர் உத்தமராக, அறிஞராக, மேதைகளாக மறைகின்றனர். காரணம் அவர் செய்தொழிலின் சிறப்பு முயற்சியே அவர்களை உயர்த்தியது.

**முடிவுரை**

முயற்சியே எச்செயலுக்கும் அடிப்படை. முயற்சியுடன் எது செய்யினும் வெற்றி உறுதி. மூடநம்பிக்கையை முறியடித்த சாதனையாளர் தந்தை பெரியார், இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றி கொண்ட டென்சிங், ஹில்லாரின் போன்றோரின் செயல்கள் முயற்சியை உலகுக்கு எடுத்துரைக்கின்றன. இப்படிப்பட்ட முயன்றவர்களின் பட்டியலில் இடம்பெற நாமும் முயன்று முன்னேறுவோம்.



**ப. மகேஸ்வரி**
**இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல்**
**ஆ பிரிவு**



## உணவுகளும் அதன் மருத்துவப் பயன்களும்

1. சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிகமிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளன.
2. சுண்டைக்காயைக் காயாகவோ, வற்றலாகவோ உணவில் சேர்த்தால், நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடிவிடும்.
3. தினமும் ஒரு டம்ளர் மாதுளை ஜீஸ் குடிப்பதால் உடலில் ரத்த அழுத்தம் குறையும்.
4. எலும்புத் தேய்மானம் ஏற்படுவதைத் தடுக்க கால்சியம் உள்ள உணவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
5. உடல் பருமன், வாயுத் தொல்லை, மாதவிடாய் பிரச்சினைகளைக் கொள்ளுப்பொடி தீர்க்கும்.
6. ஆப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் கணிசமாக இருப்பதால், தோலோடு சாப்பிட வேண்டும். பெக்டின் நம் உடலின் நச்சுகளை நீக்குவதில் திறமை வாய்ந்தது.
7. தினசரி சிறு துண்டு பைனாப்பிளைத் தேனில் ஊற வைத்து, அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.
8. பீட்டா கரோடின்ஸ் அதிகமுள்ள உணவுகளை உண்பது இதயத்துக்கு நல்லது. குறிப்பாக கேரட், கோவா, அடர் பச்சை நிறக்கீரைகள் போன்றவை.
9. துளசி இலைகள் உடல் கொழுப்பு அதிகரிக்கக் காரணமான கார்டிசோல் ஹார்மோன் அளவைக் குறைக்கிறது.
10. நீரிழிவு நோய் உள்ளவர்கள் பப்பாளி இலை, கொய்யா இலை, மஞ்சள் பொடி, வெந்தயம், ஓமம், கருஞ்சீரகம் இவற்றைக் காய வைத்துப் பொடி செய்து தண்ணீரில் கொதிக்க வைத்து நாள் ஒன்றுக்கு இருமுறை அருந்தி வந்தால் நீரிழிவு நோய் குறையும்.

**ப. கிருத்திகா**

**இளநிலை மூன்றாமாண்டு ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை**



# மருத்துவக் குறிப்புகள்



1. வெண்டைக்காய் உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும்.
2. அருகம்புல் சாற்றை மோருடன் குடித்தால் நீரிழிவு நோய் குறையும்.
3. எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும்.
4. தினமும் ஒரு செவ்வாழைப் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்தக் கொதிப்பு கட்டுக்குள் இருக்கும்.
5. இதயத்துடிப்பு மற்றும் ரத்த அழுத்தத்தை முட்டைகோஸ் சீராக வைக்கும்.
6. தினமும் ஒரு கொய்யாப் பழம் சாப்பிட்டு வந்தால் கல்லீரல் சம்பந்தமான நோய்கள் வராது.
7. சௌசௌ நரம்பு தளர்ச்சியைப் போக்கும்.
8. வரகு - உடல் எடை குறையும், மாதவிடாய்க் கோளாறு தடைப்படும்.
9. திராட்சை நல்ல பசி உண்டாக்கும். வயிற்றுப் புண்ணைக் குணமாக்கும்.
10. மாதுளை இரத்தத்தைச் சுத்தமாக்கும்.
11. வாய்ப்புண், குடல் புண்ணிற்கு வல்லாரை மூலிகையைப் பயன்படுத்தலாம்.
12. இஞ்சிச்சாறு உடல் வலியைப் போக்கும்.
13. செம்பருத்திப் பூ இதயத்தைப் பலப்படுத்தும்.
14. ரோஜா மலரை முகர்ந்தால் மூக்கடைப்பு நீங்கும்.
15. தூதுவளைப் பொடியில் மிளகுப் பொடி கலந்து சாப்பிட்டால் தும்மல் வராது.

**சே. காயத்ரி,**
**இளங்கலை மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்**

.



## விடுகதை




1. பட்டு மேல் பட்டு உடுத்திப் பட்டணம் போகும் பெண்ணே, பட்டு என்ன விலை? பட்டணத்தார் சொன்ன விலை. அது என்ன?
   விடை: வெங்காயம்
2. மேலே மேலே செல்லும். ஆனால் கீழே வரவே வராது. அது என்ன?
   விடை: வயது
3. மிகப்பெரிய உயரத்தில் இருந்து தூக்கி எறிந்தாலும் அடிபடாது. ஆனால் அருகில் உள்ள நீரில் (தண்ணீரில்) போட்டால் செத்துவிடும். அது என்ன?
   விடை: காகிதம்
4. சின்னத்தம்பிக்கு தொப்பியே வினை?
   விடை: தீக்குச்சி
5. என்னைக் கீழே போட்டால் நான் உடைந்து விடுவேன். என்னைப் பார்த்துச் சிரித்தால் நான் உங்களைப் பார்த்துச் சிரிப்பேன். நான் யார்?
   விடை: கண்ணாடி
6. மலைகள் இருக்கு, ஆனால் கற்கள் இல்லை. ஆறுகள் இருக்கு, ஆனால் தண்ணீர் இல்லை. நகரம் இருக்கு, ஆனால் கட்டடம் இல்லை. நான் யார்?
   விடை: வரைபடம்
7. அறைகள் உண்டு, இது வீடும் அல்ல. சித்திரமும் அல்ல. காவலுக்கு ஆயிரம் வீரர்கள் உண்டு, கோட்டையும் அல்ல. அது என்ன?
   விடை: தேன்கூடு
8. கிண்ணம் போல் பூ பூக்கும், பானை போல் காய் காய்க்கும். அது என்ன?
   விடை: பூசணிக்காய்
9. ஒளி கொடுக்கும், ஆனால் விளக்கு அல்ல. சூடு கொடுக்கும், ஆனால் தீ அல்ல. பளபளக்கும், ஆனால் தங்கமும் அல்ல. அது என்ன?
   விடை: சூரியன்
10. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள். அவள் யார்?
    விடை: மெழுகுவர்த்தி

**பா.சினேகா**
**இளநிலை மூன்றாமாண்டு சமூகப்பணி**






# விடுகதை

1. யாரும் செய்யாத கதவு, தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
விடை: கண்ணிமை
2. மரத்துக்கு மரம் தரவுவான். குரங்கு அல்ல. பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல. அவர் யார்?
விடை: அணில்
3. விடிய விடிய பூந்தோட்டம். விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம். அது என்ன?
விடை: நட்சத்திரங்கள்
4. உடன் வருவான், உதவிக்கு வரமாட்டான். அவன் யார்?
விடை: நிழல்
5. ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது. அது என்ன?
விடை: செருப்பு
6. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். அது என்ன?
விடை: பேனா
7. பல அடுக்கு மாளிகையில் இனிப்பு விருந்து. அது என்ன?
விடை: தேன்
8. முத்துக் கோட்டையிலே மகாராணி சிறைப்பட்டு இருக்கிறாள். அவள் யார்?
விடை: நாக்கு
9. இணை பிரியமாட்டார்கள், நண்பர்கள் அல்ல. ஒன்று சேர மாட்டார்கள், பகைவர்கள் அல்ல. அது என்ன?
விடை: இரயில் தண்டவாளம்
10. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன?
விடை: கண்ணாடி
11. பத்துப்பேர் சேர்ந்தால் பஞ்சம் போக்குவார்கள். அவர்கள் யார்?
விடை: விரல்கள்
12. ஓராயிரம் பேர் இருந்தாலும் உதவிக்கு இரண்டு பேர்தான் முன்னே வருவார்கள். அவர்கள் யார்?
விடை: கைகள்
13. தூணாய்த் தாங்குவான், தூரம் கடக்க உதவுவான். அவன் யார்?
விடை: கால்கள்
14. காலத்தை இங்கே கட்டி வைக்கிறார்கள். எளிதில் நோயைக் காட்டுவான். அவன் யார்?
விடை: மணிக்கட்டு
15. கடிகாரம் போல் துடித்திடுவான். எளிதில் நோயைக் காட்டுவான். அவன் யார்?
விடை: இதயம்
16. உச்சியில் இருப்பான். உடலுக்கு அரசன். அவன் யார்?
விடை: மூளை
17. ஆறுமுறை பல் விழுந்து முளைக்கும் மிருகம் எது?
விடை: யானை
18. உலகிலேயே மிகப்பெரிய பாலூட்டி எது?
விடை: நீலத் திமிங்கலம்
19. ஒரு நாளில் பிறந்து ஒரே நாளில் இறக்கும் உயிர் எது?
விடை: ஈசல்
20. யாரும் விரும்பாத மீசைக்காரனுக்கு எங்கு சென்றாலும் அடி உதை. அவன் யார்?
விடை: அருவி

**ப.சரண்யா**

**முதுகலை முதலாமாண்டு தமிழ் இலக்கியம்**



# தெரிந்து கொள்வோம்

## பழமொழிகள்

1. நுணலும் தன் வாயால் கெடும்.
2. மழை விட்டாலும் தூவானம் விடாது.
3. மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி.
4. பசி உள்ளவன் ருசி அறியான்.
5. தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
6. சிறு துளி பெருவெள்ளம்.
7. அழிக்கிற நாழி அகவிலை அறியுமா?
8. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
9. நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்.
10. நிறை குடம் தழும்பாது.

**ம. மலர்சூர்யா**

**இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல்**

## பொன்மொழிகள்

தினசரி பத்திரிகைகள்தாம் உலகைக் காட்டும் கண்ணாடிகள்.

படிக்க நேரம் ஒதுக்குங்கள். அது அறிவின் ஊற்று.

முளைக்கும் இதயத்திற்குக் கொடுக்கும் பயிற்சியே கல்வி.

ஆசைப்படு ஆனால் ஆசைக்கு அடிமையாகிவிடாதே.

உன் இன்பமும் துன்பமும் உன் கையில்.

காலத்தைத் தவிர வேறொன்றும் நமக்குச் சொந்தமில்லை.

அனுபவமே உலகின் தலைசிறந்த ஆசான்.

சூரியனை விட ஒளி நிறைந்தது உன் அறிவு.

கண்களால் கற்றுக்கொள்வதைவிட காதுகளால் கற்றுக்கொள்வதே பயன் தரும்.

விடாமுயற்சியே வெற்றியின் வேர்கள் ஆகும்.

**பா. சாரணி**

**இளங்கலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**

# தகவல் களஞ்சியம்

## பொது அறிவு




1. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?

   விடை: உதடு

2. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் தூங்கக்கூடிய விலங்கு எது?

   விடை: நத்தை

3. ஆசியாவின் வைரம் என அழைக்கப்படும் நாடு எது?

   விடை: இலங்கை

4. துருப்பிடித்த கோள் என அழைக்கப்படுவது எது?

   விடை: செவ்வாய்

5. நூர் காம்ப்ளக்ஸ் எந்தப் பாலைவனத்தில் அமைந்துள்ளது?

   விடை: சஹாரா பாலைவனம்

6. எந்த நாட்டில் பருமனாக இருப்பது சட்டப்படி குற்றம்?

   விடை: ஜப்பான்

7. மூத்த குடிமக்களுக்கான கண்காணிப்பு மற்றும் நலம்பேணும் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

   விடை: 2007

8. குழந்தைத் தொழில் தடை மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

   விடை: 1986

9. எந்த மலை ஒவ்வொரு நாளும் அதன் நிறத்தை மாற்றுகிறது?

   விடை: ஐயர்ஸ் ராஜ் (ஆஸ்திரேலியா)

10. இந்தியாவின் முதல் குகை இரயில் நிலையம் எது?

    விடை: கேலாங் நிலையம் (ஹிமாச்சல் பிரதேசம்)

**பா.சினேகா**
**இளநிலை மூன்றாமாண்டு சமூகப்பணி**

## பொது அறிவு

### திருக்குறளின் அதிசயங்கள்



திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் -42,194

திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247-ல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம்பெறவில்லை.

திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் - அனிச்சம், குவளை

திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி

திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்

திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து – ஔ

திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்

திருக்குறளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ, ங

திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது

திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.

திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்.

**ப. சரண்யா**

**முதுகலை முதலாண்டு தமிழிலக்கியம்**




# ஓவியங்கள்



எஸ். பவித்ரா

இளநிலை இரண்டாமாண்டு ஊட்டச்சத்து மற்றும் உணவு முறை




**D.** அனிதா

இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல்துறை

பிரிவு ‘அ’




பி. சுவேதா


இளநிலை முதலாண்டு கணிதவியல்துறை பிரிவு ‘ஆ’

**A.** சன்நிலா பிரியா



**K.**சுகுமாரி

இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்துறை பிரிவு ‘ஆ’



**A.** சன்நிலா பிரியா

முதுநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்


## பொன் மொழிகள்

நம்பிக்கை என்பது
வெற்றியோடு வரும்
ஆனால்
வெற்றி என்பது
நம்பிக்கை
உள்ளோரிடம்
மட்டும் தான் வரும் !

நிகழ்காலத்தை
சரியாகப் பயன்படுத்திக்
கொண்டால்
எதிர்காலம் நம்மை
வரவேற்கும் !

உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை
எல்லா ஆற்றல்களும்
உனக்குள்ளேயே இருக்கின்றன.
ஆதை உணர்ந்து
நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து
நான் எதையும் சாதிக்க நல்லவன்
என்று சொல்.

-சுவாமி விவேகானந்தர்




| | | |
|---|---|---|
| **பெயர்** | : | கி. இராஜநாராயணன் |
| **பிறப்பு** | : | 16.09.1923 |
| **இறப்பு** | : | 18.05.2021 |
| **ஊர்** | : | தூத்துக்குடி- கோவில்பட்டி அருகே இடைசெவல் |
| **பெற்றோர்** | : | ஸ்ரீ கிருஷ்ண இராமானுஜம்<br>லெட்சுமி அம்மாள் |
| **எழுதியவை** | : | அகராதிகள், சிறுகதைகள், குறுநாவல், நாவல், கட்டுரை |

## பெற்ற விருதுகள்

1971 - தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி விருது

1979 - இலக்கிய சிந்தனை விருது

2008 - மா.சிதம்பரம் விருது

2016 - தமிழ் இலக்கிய சாதனை விருது

2016-17- மனோன்மணீயம் சுந்தரனார் விருது

சாகித்ய அகாடமி விருது - 1991- கோபல்லபுரத்து மக்கள் - நாவல்

**சிறப்புப் பெயர்கள்** : கரிசல் இலக்கியத்தின் தந்தை

தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்

வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர்.